

உயர்திரு

# சின்னத்தம்பி கந்தையா

(சுதேச இரணவைத்திய நிபுணர்)

அவர்களின்

# நினைவு மலர்

''திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.''

பழமுதிர்சோலை,
276, சில்வா வீதி,
வட்டக்கச்சி.

13-01-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்திரு. சின்னத்தம்பி கந்தையா
### சுதேச இரணவைத்திய நிபுணர்.



| | |
|---|---|
| மண்ணில் | விண்ணில் |
| **02-01-1909** | **29-12-[illegible]0** |

மருவாரை நிக்கிரக ரகுராம னென்னவே
வலனுடு கலாபண்டிதன்
மதிக்கரிய இரணவைத் தியநிபுண கந்தைய
மன்னவன்...

— எம். வீ. கிருஷ்ணாழ்வார் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

யாழ்ப்பாணம், வடமராட்சி

கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாக் கொண்டவரும்

வட்டக்கச்சியில் வசித்து வந்தவரும்

வீரவாகுதேவர் மரபினரும்

சுதேச இரணவைத்திய நிபுணரும்

புராண படன பிரசாரகருமான

# ஸ்ரீமான் சின்னத்தம்பி கந்தையா

அவர்களின் பிரிவுகுறித்த

# நினைவு மலர்

மீறிப் பெருத்தபுண் ணாயினும் மெல்லவுன் நாமத்தைக்
கூறிப் புறப்பட்ட வேதனை நீங்குங் குலவுபடி
ஏறிச் சமீபிக்க இன்னுங் குறையும் எழுந்துவர
மாறிப்புண் ஆறும் மருந்தேனென்று ஓதுவார் மண்ணவரே

— எம். வி. கிருஷ்ணாழ்வார் —

பழமுதிர்சோலை,
276, சில்வா வீதி,
வட்டக்கச்சி.

13-01-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்துவிட்ட மாயமென்ன . . . .

குறிஞ்சி மலர்போல குடும்பத்தில் வந்துதித்து
குணத்தினிலே குன்றாகி ஓங்கி உயர்ந்தவரே!

வள்ளுவன் வழி நின்று
வாழ்வாங்கு வாழ்ந்து
அறிவினில் சிறந்து
ஆக்கத்தில் மிகுந்து

ஊக்கத்தில் உயர்ந்தவரே
உறங்கிப் போனதேனோ?

வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகையெல்லாம்
வாழும் போதினிலே வகுத்துரைத்த உத்தமரே!

ஔவையின் அமுத மொழி
அவனிக்குப் பொருந்துமென்று
அணையும் குழந்தைகட்கு
அன்பாய் எடுத்துரைத்து
வைத்தியனாய் உயர்ந்து நின்று
வாழ்ந்தவரே எங்கு சென்றீர்

அன்பு மொழியாலும் அதிகாரப் பேச்சாலும்
அற வழி காட்டி நின்ற ஆசானே!

உங்கள் சேவைகளும்
உங்கள் போதிப்பும்
எமக்குப் போதுமென்றோ
ஏங்கவிட்டுப் போனீர்கள்?
வானுறையும் தேவர்க்கு
விருந்தினராய்ப் போனீர்கள்?

சென்ற வழி நீண்ட வழி தேடியும் காணா வழி
சீர்பெற்ற பெரிய வழி சென்றது ஏன் உத்தமரே

அவனியில் ஆன்மாக்கள்
அல்லல் பொறுக்காமல்
அமைதியைத் தேடியோ
ஆண்டவனை அடைந்தீர்கள்?
தூயவனின் திருவடியில்
அமைதியுடன் வாழ்ந்திடுங்கள்

பெருமகன் — மு. குமாரசாமி
மருகி — தேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளி கொடுத்த அப்பப்பாவே . . . .

வாழ்க்கைக்கு வழி காட்டிய வல் ஆசானைக், குணக் குன்றை, அறிவுத் திருவிளக்கை எம் மத்தியிலிருந்து பறித்து விட்டான் இறைவன். என் செய்வோம் அப்பப்பா இன்று எம்மிடையே இல்லை என்பதை நம்ப மறுக்கிறது இதயம். எங்கள் ஒவ்வொரு படி முன்னேற்ற வாழ்விலும் அகமிக மகிழ்ந்து வாயார வாழ்த்துரைக்கும் தெய்வமே! நாலிரண்டு திக்குகளும் தேடுகின்றோம். போனவழியாதோ? ... ... .. ..

சேவைக்கோர் தலை மகனாய், நலிந்தவர்க்கு நல்லவனாய் விளங்கிய தன்மையினை நினைக்கின்றோம். ஆம் உங்கள் இறுதி யாத்திரையில் நலிந்தவர் மெலிந்தவர் யாவரும் சிந்திய கண்ணீரைக் கண்டோம். அதில் உங்கள் சேவைத்திறன் கண்டோம் வாயாரப் புகழ்ந்துரைத்த பெரு மக்களைக் கண்டோம். அதில் உங்கள் அன்புத் திறன் கண்டோம் பேரர்களாம் எமக்குப் பேதமை அகற்றிய முறையினை நினைக்கின்றோம். அப்பப்பாவே எமது வாழ்நாளில் உங்கள் செய்கைகளில் எதை நாம் சொல்வது? எவ்வளவைச் சொல்வது? எதனை நினைப்பது? எதனை விடுவது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து — வானுறையும்
தெய்வத்தின் அடி சேர்ந்த "திருவிளக்கே"

அமைதி கொண்டிடுக. ஆன்ம சாந்தி பெற்றிடுக.

பேரப்பிள்ளைகள்
திரு, கலா, சேரன், பரதன், அகிலன்.

## யார்க்கரு விநாயகர் துதி

அத்திமுகா யார்க்கருவின் ஆரமுதே தந்திமுகா
புத்திதரும் பொன்னே புகர்முகனே — சத்திதரும்
செவ்வக் கணபதியே செந்தேனே கந்தையா
நல்லமுத்தி தான்பெறவே நண்ணு

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டுபிர மோதூத ஆனசனி மார்கழியே
பூண்டதிதி நல்லதிர யோதசியே — நீண்டுநின்ற
கார்த்திகை நட்சத்திரம் கந்தையா பூர்வபக்கம்
பார்த்துற்றான் நற்கயிலை பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் திரு. சின்னத்தம்பி கந்தையா

அவர்களின் ஆன்ம சாந்தி வேண்டி

## யார்க்கரு விநாயகப் "பிரணவப் பொருளை"ப் பணிந்து பராவுதல்.

### வெண்பா

1. ஐங்கரனே யார்க்கருவில் ஐந்துமுகன் புத்திரனே
கைங்கரியம் செய்துநின்றான் கந்தையா — நைந்துருகிக்
கும்பிட்டு நற்றொண்டு குன்றாது செய்திட்டான்
நம்பனடி சேர்ந்திடுக நன்கு

2. நன்குசெய்யும் யார்க்கருவா நம்பனார் தம்மகனே
பொன்குவையே போதகமே போற்றிநின்றோம் — நன்குவந்து
கந்தையா ஆன்மா கயிலாயம் நண்ணுதற்கு
எந்தையே நல்லருள்செய் தேற்று

3. ஏற்றுங் கணபதியே எழில்சேர்நல் யார்க்கருவா
போற்றி நின்றான் கந்தையா போதமுற — நாற்றிசையும்
வீசு புகழ் யார்க்கருவர் வீற்றிருந்து நல்லருளைப்
பூசுகின்ற பூதியாய்ப் பூசு

4. பூசும் விபூதி புரையோடும் தீவினையை
வீசும் சுழல்காற்றாய் வீழ்த்திவிடும் — பேசுபுகழ்
கந்தையா நல்லான் கசிந்துருகிப் பூசி நின்றான்
எந்தையே நல்முத்தி ஏற்று

5. ஏற்றுகின்ற நல்முத்தி ஏரம்பா யார்க்கருவா
வீற்றுநின்று நல்லொளியை வீசிநிற்கும் — போற்றிநிற்பார்
ஆன்ம ஒளிபெறுவர் அப்பால் பிறவிபுகார்
தான்மகிழ்வர் நற்கயிலை சார்ந்து

6. சார்ந்து தவம்புரியும் சால்புள்ள கந்தையா
தேர்ந்து தெரிவான் தெளிஞானம் — சார்ந்துள்ளார்
யாவரையும் வந்தடைய யார்க்கருவா நல்லருள்செய்
சாவரையும் யாவரையும் சார்ந்து

7. சார்ந்து வினையகற்றும் சங்கரனின் நற்புதல்வா
தேர்ந்து திருவருளைச் சேர்ப்பிக்கும் — யார்க்கருவா
சார்ந்துற்ற நற்கயிலை சந்ததமும் கந்தையா
சேர்ந்து தவம்புரியச் செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. செய்தி வினைகளெலாம் சென்றகல யார்க்கருவா
உய்திபெறச் செய்வாய்நின் உள்ளொளியால் — உய்தியுற்றோம்
செல்வக் கணபதியே சென்றநல்ல கந்தையா
நல்லமுத்தி பெற்றுய்ய நண்ணு

9. நண்ணும் அடியவனுப் நன்குவந்த கந்தையா
எண்ணும் திருவருளை எப்பொழுதும் — விண்ணும்
விரும்புகின்ற யார்க்கருவா விக்கினங்கள் தீர்த்துப்
பெரும்பேறும் முத்திமழை பெய்

10. தோட்டத்துப் பிள்ளையே தோத்திரிக்கத் தேட்டமது
வீட்டகத்துச் சேர்க்க விரைந்துவரும் — வாட்டமற்று
வந்தானே கந்தையா வண்ணக் கயிலாயம்
எந்தாயே காத்தருள்க ஏற்று

11. ஏற்றுநிற்கும் யார்க்கருவா எண்ணுகின்ற கந்தையா
போற்றிப் பதம்பணிவான் போதமுற — நோற்றுத்
தவம்செய்யத் தண்ணளியைத் தக்கோன் உறச்செய்க
பவம் நீங்கப் பார்க்க பரிந்து

12. பரிந்து அருள்சுரக்கும் பாகுநேர் நற்றேவே
விரிந்து நிற்கும் நற்கயிலை வீடாய்த் — தெரிந்துநிற்கும்
கந்தையா நல்லான் கயிலாயம் தன்னிடத்தே
எந்தையே யார்க்கருவா ஏற்று

13 ஏற்றும் கயிலையில் ஏற்றநல்ல கந்தையா
போற்றும் தவம்செய்து போதமுற — வீற்று
எழுந்தருள்க யார்க்கருவா ஏற்றசுகம் நல்கும்
செழுந்தமிழே நற்கயிலை சேர்

14. சேர்க்கும்நல் யார்க்கருவா செங்தேனே தும்பிமுகா
ஆர்க்கும் திருவருள்செய் அன்புநவே — பார்க்கும்
திருவருள்தான் கந்தையா தீங்ககலக் கயிலை
பெருவருளால் சேர்க்கப் பெரிது

15. பெரிது பெருவருளால் பேறுறுவார் கந்தையா
''அரிதரிது'' இப்பிறவி அப்பனே — பெரிதும்
முத்திபெற நற்கயிலை முன்நிற்க யார்க்கருவா
சித்திபெறச் செய்ய சிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியப்பா

சின்னத் தம்பி சின்னப் பிள்ளை;
வன்ன யார்க்கரு வாகார் பிள்ளை —
தன்னை வேண்டத் தருந்த வரத்தால்
வந்து தோன்றி வதிந்த கந்தயன்
நூல்பல வாகடம் நுண்ணிய விடயம்
சால்பொடு கற்ற சற்குணத் தோன்றல்
கந்தயன் என்னும் கருணைக் கடலான்
புராணம் திருமுறை பூதி கோவை
சராசரம் உவக்கத் தரணியில் கற்றான்
கற்ற கல்வி கருணை யுடனே
உற்ற இடத்தில் உதவி புரிந்தது
உற்றார் உறவினர் ஊரினர் கிளைஞர்
கற்றார் அயலவர் கருதிடும் நண்பர்
பெற்றார் போலப் பெரிதும் விரும்ப
நற்றாய் எனவே நல்கினன் அறிவை
இன்சொல் இயம்பினன் ஈந்தனன் மருந்துடன்
நன்சொல் தன்னுடன் நயந்திடும் பொருளை
வன்சொல் அறியான் வழிபடு கடவுளை
நின்சொல் வழங்குக நிர்மலா என்றான்
பொன்சொல் பொதிந்ததும் பொருள்பல செறிந்ததும்
முன்சொல் தெய்வ மூவர் மொழிந்ததும்
தென்சொல் விளங்கத் தெய்வ வாசகன்
தன்சொல் தெய்வச் சொல்லெனக் காட்டிய
தேனெனச் சுவைதரும் தெவிட்டா ஞானத்
திருவா சகத்தையும்செப் பிநின்றான்
பாக்கள் சொல்வார் பழமொழி சொல்வார்
தேக்கும் தமிழ்ச்சுவைத் தேசிகனாக
வாக்கும் சிறப்புற வழங்கினன் நன்கே
''ஈதல் அறமாம்'' என்று மொழிந்தார்
''தீவினை விட்டு ஈட்டல் பொருள்''
என்றும் மொழிந்தார் எங்கும் நிறைந்த
நாதன் அருள்தான் நன்மை தந்து
சாதல் பிறத்தல் தவிர்க்கும் என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா என்போம் மகிழ்வுடன் வார்த்தை
தேமா எனவே தெரிந்து வழங்கினார்
அண்ணா என்றால் அமுதார் மொழியால்
தம்பி என்று தண்ணளி பொருந்தச்
சாற்றி நின்றார் சங்கரன் பாதம்
போற்றி செய்த பொலிவுறு செல்வன்
அப்பா என்றால் அமுத மொழிபல
செப்பி நின்றார் செழுந்தமிழ் தன்னால்
அப்பப் பாஎன அழைத்த போது
பப்பப் பாஎனப் பழந்தமிழ் பகர்ந்தார்
தமக்கை தங்கை தமையன் மனைவி
மருமகள் பிள்ளைகள் மகிழ்வுறு சுற்றம்
போற்றி வாழ்த்தப் பொலிந்த தமிழால்
சாற்றி நின்ற சங்கரன் அன்பன்
உண்மைப் பொருள்பல உரைத்த தலைவன்
திண்மை தரும்பொருள் சிவமயம் என்றார்
நன்மை தருவதும் நம்பன் நாமம்
புன்மை தவிர்ப்பதும் பூரிப்பளிப் பதுமெம்
சிவன்திரு நாமம் என்றே மொழிந்தார்
அப்படி அருமை மொழிபல இயம்பியும்
துப்புர வான தூமொழி சொல்லியும்
எம்மை எல்லாம் என்றும் வாழ்க
என்று ஏற்ற ஏற்ற உதவிகள்
புரிந்த செல்வன் புகர்முகன் அருளால்
சிவன்சே வடிக்கீழ்ச் சேர்ந்தான் அதனால்
''அவனரு ளாலே அவன்தாள் வணங்கி''
சிந்தை சிறப்புறச் சிவத்தொண்டாற்றி
''வந்த வினையை'' வழுக்கச் செய்யச்
சிவன்கழல் தன்னைத் தினமும் வணங்கித்
தவம்பல புரிந்து தழைத்து
சிவன்பதம் தன்னைத் தியானிப் போமே

மருகன்
**க. சி. சண்முகம்**
ஓய்வுபெற்ற அதிபர்

கரவெட்டி கிழக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவரொரு தெய்வப்பிறவி

மண்ணளந் தேவிளை யாடிடு காலத்துக் கட்டிமற்றும்
புண்ணிவை வந்திடின் நம்மாச்சிப் பேத்தியின் வீடுதஞ்சம்
அண்ணனெனம் கந்தையா அன்புடன் தான்வர வேற்றிடுவார்
விண்ணனெனல் லோதம்பி ஏனழு வாவெனன்பார் வந்தணைத்தே

காரத் திரியுண்டு கத்தியுண் டாயினும் நெஞ்சதனில்
ஈரத் தனமுடை யாரெங்கள் கந்தையா அண்ணனன்பு
சேரத் தடவுவார் கத்திவைப் பார்நாமும் கத்திநிற்போம்
பாரச் சுமையது தான்போன தென்னநோய் போய்விடுமே

கோழியின் செட்டையிற் தொட்டிந்த எண்ணெய் தடவுதம்பி
நாளை மறுதினம் வந்துபார் என்பார் நமதண்ணனே
வேளை தெரியாத காலனே கொண்டான் கலங்குகிறோம்
ஆளும் இறையடி யானந்த முண்டங்கே ஆறுதிரே

தம்பி துரைகுஞ்சு ராசாத்தி என்றன்பு வார்த்தைகளால்
வெம்பும் நிலையிலே சோர்தரி யாரொடு சேர்ந்துரைப்பார்
உம்பர் உலகிலே உத்தம மாம்பணி தான்தொடரத்
தம்பய ணந்தொடர்ந் தார்துயர் நீக்கி அமைகுவமே

மன்னவன்

## சீனியம்மான் . . . .

அம்மான்! உங்களைச் சீனியம்மான் என்றுதான்
அழைப்போம்
மூத்தம்மான் ... ... ...
ஆசை அம்மான் ... ...
சீனியம்மான் ... ... ...
அம்மா உங்களை "எங்கடை மூன்றுராசாக்கள்"
என்று அடிக்கடி கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்
எங்களுக்கு நீங்கள் அம்மான்மார்
அம்மா ... ... ...
பெரியம்மா ... ... ...
குஞ்சியாத்தை ... ... ... ...
இவர்களுக்கு நீங்கள் சக்கரவர்த்திகள்
ஆச்சிப்பேத்தி வீடு ... ... ... ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஒரு பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக விரிவுரையாளனாக இருந்து நான் அதை
உணர்கிறேன் ... ...
தமிழ், புராணம், இலக்கியம்
சமயம், கலாசாரம், பொருளியல், விவசாயம்
மருத்துவம் ... ... இப்படிப்
பல துறைகளிலும் அங்கு கருத்தரங்குகள்,
கலந்துரையாடல்கள், நிகழ்ந்தன.
நாவலரின், மருகரும் மாணவருமான
வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை என்று
படித்திருக்கிறேன்
சிற்றம்பல உபாத்தியாயரின்
மருகரும் மாணவரும், மகனுமாக
சீனி அம்மான்
வாழ்ந்ததை நான் கண்டிருக்கிறேன்
சோக்கிரட்டீசைச் சுற்றி ... ... ...
பிளேட்டோவைச் சுற்றி ... ... ...
பொன்னம்பலபிள்ளையைச் சுற்றி ... ... ...
ஒரு அறிவுத்தாகம் கொண்டகுழு இருந்ததாகப்
படித்திருக்கிறேன்
அம்மான் உங்களைச் சுற்றியும்
ஒரு விசாலமான வட்டம்.
எங்கள் குடும்பத்தின் 'விலாசம்' நீங்கள்தான்
எங்கள் குடும்பத்தின் முகவரி
உங்கள் பெயராகவே இருந்தது
அம்மான் ...
உங்களை அம்மான் என்றுதான் அழைப்போம்
அம்மாவுக்கு நிகரானவன் என்பதாலோ ... ...
அம்மாவுக்கு ஆண்பாலாகவோ ... ... ...
அம்மா வுடன் ''னகர ஒற்றை ஒட்டவைத்து
அம்மான் என்ற உறவுப் பெயரைத்
தமிழ் மொழி தந்திருக்க வேண்டும்
அம்மான்; குடும்பத்தின் சகல தொழிற்பாடுகளிலும்
இணைந்து ஈடுபடும் ஒரு பிணைப்பாளன்
அம்மான் என்ற சொல்
இடையிலே மாமா ஆகி இப்போது
அங்கிளிலே'' வந்துநிற்கிறது
உறவும் தொடர்பும் மெல்ல, மெல்ல
பிரிந்து சென்ற வரலாற்றையே
இச்சொல் மாற்றம் காட்டி நிற்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மான் உங்கள் வாழ்வை, நினைத்துப்பார்க்கிறேன்
என் நினைவுக்கு எட்டிய நாள்கள்
நீங்கள் வைத்தியனாய், நல்ல கமக்காரனாய்
பெரிய குடுமியுடன்
சைவாசார சீலனாய் ... ...

புராண பிரசங்கியாய் ... ...
நானும் அண்ணனும் இம்பலந்தா, மறுத்தா, மாதாத் தோட்டங்களிலே
உங்களோடு உலாவிய நாள்கள் ... ...
அண்ணன் உங்களோடு இணைந்து
கொத்திய, இறைத்த, ஆலாயிதித்த காலங்கள்
உங்களின் அன்புக்கு இலக்காகிய காலங்கள்;
உங்களின் ஆத்திரத்திற்கு ஆளாகிய நேரங்கள்.
1987 . ... ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ... ...
நானும் மனைவியும் பிள்ளைகளும்
உங்களோடு கழித்த களித்த மூன்று மாதங்கள்
அப்பப்பா என்று எல்லோரும் அழைக்க,
உங்களையே அப்பாவின் அப்பா என்று என் பிள்ளைகள்
நினைத்தார்கள் ... ... ...
அம்மான் .. ... ...
உங்களின் சாயல் எனது நடத்தைகளில் தெரிகிறது
என்று மனைவி கூறுவாள்
உண்மையிலே அம்மான் நான் மகிழும் வார்த்தைகளில்
அதுவும் ஒன்று
சாமியார், அம்பலப்பா, விஜண்ணன் முதலிய
அனுபவ சாலிகளோடு வட்டக்கச்சியில்
உங்களுடன் கழித்த நாள்கள் ... ... ...
முருகன் கோயிலில் கந்தஷஷ்டியில்
கந்தபுராணத்தை நான் வாசிக்க
நீங்கள் பயன் சொன்ன நாள்கள்
அந்தப் ''பயன்மிகு'' நாள்கள்
இனிவருமா ... ...

அம்மான், உங்களின் நினைவுகள் நீண்டு செல்கின்றன ...
இன்று நீங்கள் இல்லை. ஆனால் என்றும் எம் இதயத்தில் இருப்பீர்கள்.

அம்மான் என்ற ஒரு அன்புப் பதம் இப்போதுதான் முதன் முறையாக எனக்கு ''ஆராய்ச்சிப் பொருளாக'' மாறியிருக்கிறது.

எஸ். சிவலிங்கராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மறையலாம் . . . .
# மரபுகள் . . . . . ?

ஆச்சிவீட்டுக் கந்தையாப்பரியாரியார் வட்டக்கச்சியில் கடந்த பத்துநாட்களுக்கு முன்னர் காலமாகி விட்டார் என்ற தகவலை அவர் மருகரும் எனது மாணவரும் நண்பருமான திரு சிவலிங்கராஜா இரண்டு மூன்று நாட்களுக்கு முன்தான் சொன்னார்.

கரவெட்டி கிழக்கு ஆச்சிவீட்டுப் பரியாரியார் குடும்பத்துக்கும் கரவெட்டி மேற்கிலிருக்கும் எங்கள் குடும்பத்துக்கும் ஒரு நீண்ட உறவுண்டு.

கந்தையாப் பரியாரியாரின் தகப்பனார், கந்தையாப்பரியாரியார் ஆகியோர் வழிவந்த வைத்திய உறவு ஒருபுறம், மறுபுறம் கந்தையாப் பரியாரியாரின் ஒரு மருமகன் பண்டிதர் சண்முகத்துக்கும் எனது தகப்பனாருக்குமிருந்த உறவு. பின்னர் சிவலிங்கராஜாவுக்கும் எனக்குமுள்ள உறவு என அந்தச் சங்கிலித் தொடர் நீள்கிறது.

சண்முகம் மாஸ்ரருக்கும் சிவலிங்கராஜாவுக்கும் எப்படியோ எனக்குத் தெரியாது, ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அந்தக் குடும்பத்துக்கு நான் இறுக்க வேண்டிய கடன் இன்னும் இருக்கிறதாகவே. நாற்பத்துமூன்று வருடத்துக்கு முன்னர் கந்தையாப்பரியாரியார் மாற்றிய வலதுகாற் புண்ணின் ஆழமான தழும்பு எனக்கு இன்றும் நினைவுறுத்திக் கொண்டிருக்கின்றது.

நடக்கவே முடியாமற் கிடந்த என்னை நடந்தால் இரத்தம் கசிந்து வழிந்த என் காற் புண்ணை, சொல்லால் தடவி, இன் முகத்தால் நம்பிக்கைதந்து தனது எண்ணெயால் மாற்றியவர்.

எனக்கு மாத்திரமல்ல. எனது தங்கையொருத்திக்கு ஏற்பட்ட புண்ணுக்கு அவர் சிகிச்சையளித்த முறைமை ... ... ... தெரு மூலையில் அவர் திரும்பும் பொழுது, அந்தக் கெந்து நடையால் மேல் தெரியும் உச்சிக்குடுமியைக் கண்டாலே அழத்தொடங்கி விடுவாள். அவளுக்கு மருந்து போடும்பொழுது அவர் சொன்ன பாரதக்கதைகள் . ... மறக்க முடியாத நினைவுகள்.

இவையெல்லாம் ஏதோ எங்கள் குடும்பத்து நோயாளிகளுக்கு மாத்திரமே செய்யப்பட்ட ''ஸ்பெஷல்'' சேவைகளல்ல.

அந்த வைத்திய முறைமையின் தன்மையே அது. சிகிச்சை நோயாளியின் சூழலுக்கு வரும். எல்லா வியாதிகளுக்கும் சிகிச்சைக்கெனத் தனியொரு சூழலை உண்டாக்க வேண்டும் என அந்த வைத்திய முறைமை நிர்ப்பந்திப்பதில்லை. வைத்தியர் அந்தச் சூழாதில் ஒருவர் இதை ஆங்கிலத்திற் சொல்வது அவசியமாகின்றது. அங்கு நடந்தது Medicine in Community இப்பொழுது கருதப் படுவதுபோல ''சமூக வைத்தியம்'' என்பது ''மொத்த நிலை'' வைத்தியமாக இருக்க வேண்டுவதில்லை. வைத்தியன் சமூகத்தினுள் தான் தொழிற்படுகிறான்.

இன்றைய ''டொக்டர்'' அந்தச் சமூக முழுமையுடன் இணைந்தவனல்ல. இந்த இணைவு இல்லாமல் மருத்துவம் முழுமையடையாது. (நந்தியின் ''நம்பிக்கைகள்'' தரும் நம்பிக்கை இது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வைத்திய முறைமையினில் இன்னொரு முக்கியமான ''முழுமை'' யுமிருந்தது. வைத்தியம் நோயை மாற்றுவது மாத்திரமல்ல. நோயாளியின் முழு ஆளுமையையும் உள்வாங்கிக் கொண்ட ஒரு சிகிச்சை முறை அது.

ஆச்சி வீட்டுக் கந்தையாப் பரியாரியார் முதல் செட்டிய வீட்டுக் கந்தையாப் பரியாரியார் வரை யாரிடம் என்றாலும் வைத்தியம் தொடங்கும் பொழுதே பிறந்த நட்சத்திரமும் கேட்கப்பட்டுவிடும்.

மருத்துவ ஸ்தாபனத்தில் ஒன்றைச் சொல்வார்கள் நோயாளியைக் காப்பது என்பது கடவுளின் வேலை. வைத்தியன் வேலை அருந்தலை துன்பத்தைக் குறைப்பதுதான் என்று.

''நோயை மாற்றுதல்'' அல்லது வருத்தத்தை மாற்றுதல் என்பதுதான் நமது சொல் வழக்கு. இந்தத்தொடரில் வரும் ''மாற்றுதல்'' என்னும் சொல்லை அதன் பண்பாட்டு வைத்திய உள்ளார்த்தங்களை நன்கு விளங்கிக் கொள்ள வேணும். வைத்தியம் பற்றிய நமது உலக நோக்கை அந்தச் சொல் சுட்டுகிறது.

கந்தையாப்பரியாரியார் இந்த வைத்திய முறைமையின் ஓர் 'உயர்ந்த' உதாரணம். இந்த வைத்திய முறைமை சில சமூக உற்பத்தி முறைமைகள் காரணமாக அதே முறைமையில் தொடரமுடியாதென்பது உண்மைதான். ஆனால் அந்த மருந்துகள் நோயை மாற்றின. அதை மறந்துவிடக் கூடாது.

நமது பாரம்பரியத்தை அறிய வேண்டும், பேண வேண்டும். என்கின்ற குரல்களினூடே ஏன் இந்த வைத்திய முறைமைகள் பற்றிப் பேசப்படுவதில்லை. மருத்துவத் துறையிலுங்கூட ''மருத்துவ மானிடவியல்'' (Medical Anthropology) என்ற ஒரு துறையுண்டே! அது பற்றிய பேச்சையே நம்மிடையே காணோமே! எமது மருத்துவ முறைமைகளின் சமூகவியல் பற்றி (The Sociology of our Medicinal Systems) சிந்திக்கத் தொடங்கியுள்ளோமா?

எந்த முறைமையிலும் சிறந்த வைத்தியன் உயர்ந்த மனிதனாகவே போற்றப்படுகிறான்.

கந்தையாப்பரியாரியாரின் மறைவு இந்த விளுக்களை அத்தியாவசியமாக்கின்றது. அந்த மரபின் புத்தாக்கத்துக்கு நாம் என்ன செய்யப் போகின்றோம்.

அந்த மனிதனின் துயர் துடைக்கும் கைவன்மையையும் அந்த மருத்துவ முறைமையின் வன்மையையும் நேரில் அனுபவித்தவன் நான்.

இப்படியான ''பண்பாட்டு வாகனங்களை'' நினைப்பதற்கு வழி குடும்பத்தார் புலம்பல்களல்ல. அந்தப்பணியை இன்றைய சூழலுடன் இணைத்துச் செல்வதற்கான இரு உலக அறிவுத்தாடனமுடைய மருத்துவ ஊழிய (தேவ ஊழியம் போன்ற) முறைமை வேண்டும்.

இது ஒரு சமூகப்பணி, சுயநலமற்ற சமூகப்பணி.

இந்த மண்ணின் மீட்பினுள் இவையும் தொக்கிநிற்கின்றன.

நடராஜ கோட்டம்,
வல்வெட்டித்துறை

**பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

## கட்டளைக் கலித்துறை

''மண்ணின் கலம் போன்ற'' மாந்தர் தம் வாழ்வொரு— வாழ்வலவே
எண்ணும் பொழுதெனை ஆளும் சிவன்கழல் — ஏத்திடுக
கண்ணும் கருத்தும் கறைக்கண்டன் பாதம் — கருதிடட்டும்
விண்ணுற்றுக் கந்தையா விட்டுற்று நின்றார் — விடுதுயரே

---

எமது பெருமதிப்புக்குரிய குடும்பத்தலைவர் உயர்திரு. சின்னத்தம்பி கந்தையா (சுதேச இரணவைத்திய நிபுணர்) அவர்கள் காலமானபோது உடனிருந்து உதவியவர்களுக்கும், மரணச்சடங்கிலே கலந்துகொண்டவர்களுக்கும், அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளிலே கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், எல்லாவகையிலும் எமக்கு உதவிய அனைவருக்கும் மனமுவந்து நன்றி கூறுகிறோம்.

இப்படிக்கு
பெருமகன்
ம. மு. குமாரசுவாமியும்
குடும்பத்தினரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org